

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 276 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 03 – புதன்கிழமை 17 மே 2023 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 276 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 03 - Wednesday 17 May 2023 - Madurai 8 Pages ₹ 5.00


## ஊரகப் பகுதிகளில் மின் விநியோகம்!

# தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய அரசு பாராட்டு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நேற்று (16.05.2023) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்கள் சந்தித்து பேசினார். இந்த சந்திப்பின் போது, தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன், துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பால கிருஷ்ணன், மார்க்சிஸ்ட் மாநில குழு உறுப்பினர் ஆறுமுகநயினார் ஆகியோர் உடனிருந்தனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஒன்றிய அமைச்சர் கடிதம்!

**புதுடெல்லி, மே 17 - தமிழ்நாட்டில், ஊரகப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு வழங்கப்படும் மின் விநியோகம் தேசிய சராசரி அளவை விட உயர்ந்துள்ளதைச் சுட்டிக்காட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஒன்றிய எரிசக்தித் துறை அமைச்சர் ஆர்.கே.சிங் அவர்கள் பாராட்டி கடிதம் எழுதியுள்ளார்.**

இதுபற்றிய விபரம் வருமாறு:-

தமிழ்நாட்டில், ஊரகப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு வழங்கப்படும் மின் விநியோகம், தேசிய சராசரி அளவைவிட கூடுதலாக வழங்கப்படுவதைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாடு அரசுக்குப் பாராட்டு தெரிவித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு ஒன்றிய எரிசக்தித் துறை அமைச்சர் ஆர்.கே. சிங் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

ஒன்றிய எரிசக்தித் துறை அமைச்சர் அவர்கள் 11.5.2023 அன்று எழுதியுள்ள கடிதத்தில், ஊரகப் பகுதிகளுக்கு வழங்கப்படும் மின் விநியோகம் தேசிய அளவில் 2018-2019 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 20 மணி நேரம் 70 நிமிடங்களாக வழங்கப்பட்டு வந்த நிலையில், 2021-2022 ஆம் ஆண்டில், அது நாளொன்றுக்கு 20 மணி நேரம் 53 நிமிடங்களாக இருப்பதாகவும்,

இந்த நிலையில், தமிழ்நாட்டில் 2018-2019 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 20 மணி நேரம் 77 நிமிடங்களாக ஊரகப் பகுதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மின் விநியோகம், 2021-2022ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 22 மணி நேரம் 15 நிமிடங்களாக உயர்ந்துள்ளதைச் சுட்டிக்காட்டி, தனது பாராட்டினைத் தெரிவித்துள்ளார்.

மேலும், தமிழ்நாட்டில், மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட ஏதுவாக, 24 மணி நேரமும் மின் விநியோகத்தினை வழங்கிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒன்றிய அரசு உதவிடும் என்றும் ஒன்றிய எரிசக்தித் துறை அமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## மதச்சார்பற்ற கட்சிகள் ஓரணியில் திரள்வது குறித்து

# தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் விவாதித்தேன்!

### மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி பேட்டி!

சென்னை, மே 17– முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை சந்தித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்கள் ஆலோசனை நடத்தினார். வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற கட்சிகள் ஓரணியில் திரள்வார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (16.05.2023) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்கள் சந்தித்தார். இந்த சந்திப்பின் போது, தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன், துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மார்க்சிஸ்ட் மாநில குழு உறுப்பினர் ஆறுமுகநயினார் ஆகியோர் உடனிருந்தனர். இந்த சந்திப்பைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய சீதாராம் யெச்சூரி, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மதச் சார்பற்ற கட்சிகள் ஓரணியில் திரள்வார்கள் என்றும், இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் விவாதித்ததாகவும் தெரிவித்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்கள் பேட்டி வருமாறு:–

ஒவ்வொரு மாநிலத்திலும் தனித்துவமான பிரச்சினைகள் உண்டு. அதற்கு ஏற்ப தெளிவான முடிவுகள் எடுக்கப்படும். தமிழ்நாட்டில் அனைத்து மதச்சார்பற்ற கட்சிகளும் ஓரணியில் திரண்டுள்ளன. கர்நாடகாவில் காங்கிரஸ் தனித்து பா.ஜ.க.வை வீழ்த்தியுள்ளது. கேரளாவில் இடதுசாரி முன்னணியும், ஐக்கிய ஜனநாயக முன்னணியும் நேர் எதிராக உள்ளன. இதன் மூலம் பா.ஜ.க.வுக்கு ஒரு எம்.எல்.ஏ. இடம் கூட கிடைக்காத நிலை அங்குள்ளது. மாநிலங்களின் நிலைமைகளுக்கு ஏற்ப முடிவுகள் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் பா.ஜ.க. மீண்டும் அதிகாரத்திற்கு வருவது தடுக்கப்பட வேண்டும். ஜனநாயகமும் அரசியலமைப்பும் காப்பாற்றப்பட வேண்டும்.

அதற்கு பா.ஜ.க. அல்லாத ஆட்சி ஒன்றிய அளவில் அமைத்தாக வேண்டும். அதற்காக ஆங்காங்குள்ள மாநில கட்சிகள் செயல்படுவது மிகவும் அவசியமாகும். மதச்சார்பற்ற கட்சிகள் நாடாளுமன்றத் தேர்தலின்போது ஒன்று சேர்ந்து செயல்படுவது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் விவாதித்தேன்.

இவ்வாறு சீதாராம் யெச்சூரி அவர்கள்பேட்டியளித்தார்.

## போக்குவரத்தை கண்காணிக்க நவீன கேமராக்கள்!

# விபத்துகளை தவிர்க்க புதிய திட்டம்!

### தமிழ்நாடு அரசு நடவடிக்கை

சென்னை, மே 17- தமிழ்நாட்டில் சாலை போக்குவரத்தை கண்காணித்து விபத்துக்களை தவிர்க்கும் வகையில் புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் வழிகாட்டுதல்களை பின்பற்றி புதிய நடைமுறைகளை தமிழ்நாடு அரசு வெளியிட்டு உள்ளது.

அதன்படி மாநிலம் முழுவதும் உள்ள சாலைகளில் போக்குவரத்தை கண்காணிக்க நவீன கேமராக்கள் வைக்கப்படும்.

நவீன தொழில்நுட்பத்தின் மூலம் போக்குவரத்தை கண்காணித்தல், விபத்தை தவிர்த்தல், விதிகளை மீறும் வாகனங்களுக்கு அபராதம் விதித்தல் உள்ளிட்டவற்றை மேற்கொள்வது மட்டுமின்றி போக்குவரத்து போலீசார் தங்கள் உடலில் கேமராவை பொருத்தி வாகன போக்குவரத்தை கண்காணிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

## தமிழ்நாடு அரசின்

# நெடுஞ்சாலை சட்டம் செல்லும்!

### உச்சநீதிமன்றம் தீர்ப்பு!

புதுடெல்லி, மே 17- தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலை சட்டம் செல்லும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. அரசு திட்டங்களுக்காக கையகப்படுத்தப்படும் தனியார் நிலங்களுக்கு நியாயமான இழப்பீடு வழங்கும் வகையில் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு என்ற சட்டத்தை ஒன்றிய அரசு கடந்த 2013ம் ஆண்டு கொண்டுவந்தது.



இந்த புதிய சட்டத்தில் இருந்து மாநில அரசின் நில கையகப்படுத்தல் சட்டங்களான மாநில நெடுஞ்சாலைகள் சட்டம் தொழில் பயன்பாட்டுக்கான நிலம் கையகப்படுத்தும் சட்டம் உள்ளிட்ட சட்டங்களை பாதுகாக்கும் வகையில் கடந்த 2015ம் ஆண்டு தமிழ்நாடு அரசு 105(ஏ) என்ற சட்டப்பிரிவை சேர்த்து நியாயமான இழப்பீடு, வெளிப்படைத்தன்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு சட்டத்தை கொண்டு வந்தது. இது தொடர்பாக சென்னையைச் சேர்ந்த சி. எஸ்.கோபாலகிருஷ்ணன், வி.திருநாராயண் ஆகியோர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்களை விசாரித்த நீதிபதிகள் தினேஷ் மகேஸ்வரி சஞ்சய் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு அளித்த தீர்ப்பில் தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலை சட்டம் நில கையகப்படுத்துதலில் ஏற்படுத்தும் தவிர்க்கக்கூடிய தாமதத்தை தடுக்கும் நோக்கில் உள்ளது.

நிலம் கையகப்படுத்தலுக்கான புதிய சட்டத்தின் ஒப்பிடுகையில், நெடுஞ்சாலை சட்டத்தில் உள்ள விதிகள், நடைமுறைகளுக்கான வேறுபாடுகள், பாகுபாடுகள் இருப்பதாக முன்வைத்த வாதத்தை நிராகரிக்கிறோம். தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் செல்லும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துரைமுருகன் - ஐ.பெரியசாமி - க.பொன்முடி - ஆ.இராசா - கனிமொழி கருணாநிதி - உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு!

# தொ.மு.ச. பேரவை பொன்விழா மாநாடு: முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை சிறப்புரை!

### மு.சண்முகம் எம்.பி. அறிக்கை!

சென்னை, மே 17 - தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை எல்.பி.எப்.யின் பொதுக்குழு நேற்று (16.5.2023) தொடங்கியது. தொடர்ந்து 17, 18 ஆகிய தேதிகளில் பொன்விழா மாநாடும் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறுகிறது. மாநாட்டினை யொட்டி, 18 ஆம் தேதி பேரணி நடைபெறுகிறது. பேரவை பொன்விழா மாநாட்டில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்புரையாற்று கிறார்கள்.

இந்நிகழ்ச்சி குறித்து தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தொ.மு.ச.பேரவை பொன் விழா மாநாடு - 25-வது பொதுக்குழு நேற்று (16.5.2023) தொடங்கியது.

தொடர்ந்து 17, 18 ஆகிய தேதிகளில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

16-5-2023 காலை 9 மணிக்கு கொடியேற்றல், காலை 10 மணிக்கு ஐ.என்.டி.யு.சி., ஏ.ஐ.டி.யு.சி, எம்.எச்.எஸ்., சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., டி.யு.சி.சி., ஏ.ஐ.சி.சி.டி.யு., எம்.எல்.எப்., எல்.எல்.எப்., பி.எஸ்.ஐ. ஆகிய தொழிற்சங்கத் தலைவர்கள் உரையாற்றினர்.

பிற்பகல் 2 மணிக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. பொதுக்குழுவை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. ஆண்டறிக்கையை தாக்கல் செய்தார். பொருளாளர் கி.நடராசன் வரவு - செலவு கணக்கு தாக்கல் செய்தார்.

**கருத்தரங்கம்!**

மாலை 5 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கத்தில் “சமூக நீதி” என்ற தலைப்பில் திருச்சி சிவா எம்.பி., ‘ஜனநாயகம்’ என்ற தலைப்பில் திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு, ‘தொழில் வளர்ச்சி’ என்ற தலைப்பில் சி.மகேந்திரன் (சி.பி.ஐ.), ‘தொழிலாளர் நலன்’ என்ற தலைப்பில் சு.வெங்கடேசன் எம்.பி. (சி.பி.ஐ.) ஆகியோர் பேசுகின்றனர்.

**இரண்டாம் நாள் நிகழ்ச்சி**

17-5-2023 புதன்கிழமை காலை 10 மணிக்கு குழுக்களின் விவாதம் நடைபெறுகிறது. மாலை 4 மணிக்கு தீர்மானங்கள் பொதுக்குழுவில் வைத்து ஒப்புதல் பெறப்படுகிறது.

**மூன்றாம் நாள் நிகழ்ச்சி**

18-5-2023 புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் வாழ்த்தரங்கத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர்கள் - அமைச்சர் ஐ.பெரியசாமி, அமைச்சர் க.பொன்முடி, கனிமொழி கருணாநிதி எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் பி.கே.சேகர் பாபு, மா.சுப்பிரமணியன் மற்றும் நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தயாநிதிமாறன் எம்.பி., மற்றும் அமைச்சர் பெருமக்கள், கழக முன்னோடிகள் பேசுகின்றனர்.

மாலை 4 மணிக்கு சுவாமி சிவானந்தா சாலையில் அணி வகுத்து நடைபெறும் மாபெரும் பேரணியை கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைக்கிறார்.

இரவு 7 மணிக்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழா பேருரையாற்றுகிறார். மேலும் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், கழகப்பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

தொ.மு.ச. பொருளாளர் கி.நடராசன் நன்றியுரையாற்றுகிறார்.


# மின்விநியோகம் சீராக கிடைக்க மின்னக தொலைபேசி எண்!

சென்னை, மே.17– சென்னையில் மக்கள் பகல் நேரங்களில் வெளியே வர முடியாத அளவிற்கு வெப்பநிலை உச்சத்தில் உள்ளது. அதிலும் மாலை 6 மணி வரை கூட வெப்பத்தின் அளவு 40 டிகிரி செல்சியஸ் என்ற நிலையில் உள்ளது. சென்னையில் ஏற்பட்ட கோடைகாலங்களில் மிக மோசமான ஒரு கோடை காலமாக இந்த மாதம் பார்க்கப்படுகிறது. இந்த மாத தொடக்கத்தில் மழை பெய்த நிலையில் உண்மையான கோடை காலம் கடந்த இரண்டு நாட்களாகத்தான் சென்னையில் நிலவி வருகிறது.

இது தொடர்பாக மின்சாரத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி செய்து இருந்த போஸ்டில் கூட, சென்னையின் நேற்றைய 15/05/2023 மின் தேவை 3991 மெகாவாட் ஆகும். இந்த தேவை எந்த மின் தடையுமின்றி ஈடு செய்யப்பட்டது.

இதற்கு முந்தைய உட்சபட்ச தேவை 20/04/2023ல் 3778 MW ஆகும். நேற்று சென்னையில் மின் நுகர்வு 84.51 மி.யூனிட்கள் பயன்படுத்தப்பட்டது. இதற்கு முன் 21/04/2023 அன்று 84.23 மில்லியன் யூனிட்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது, என்று குறிப்பிட்டு இருந்தார்.

மின்சாரம் தடை படாமல் வழங்கப்பட்டதாக அமைச்சர் செந்தில் பாலாஜி குறிப்பிட்டார். மேலும் அவர், மின்சார தடைகள் ஏற்படும் பட்சத்தில் பின்வரும் விஷயங்களை மேற்கொள்ள வேண்டும்.



1. உங்கள் ஏரியாவிற்கான இபி அலுவலக எண் கூகுளில் கிடைக்கும். இந்த நம்பருக்கு போன் செய்யலாம். 2. மின்னகத்தின் இலவச நம்பருக்கு போன் செய்யலாம். 3. 9498794987 என்பதுதான் இலவச மின்னக நம்பர் ஆகும். இதற்கு நீங்கள் போன் செய்து சில நிமிடங்கள் காத்திருந்தால் புகார் அளிக்கலாம். 4. புகார் அளிக்கும் போது உங்களின் பகுதி, தெரு மற்றும் மின்சார இணைப்பு எண் ஆகியவை மிக முக்கியம். 5. இல்லையென்றால் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அதிகாரபூர்வ ட்விட்டர் பக்கத்தில் பதிவு செய்யலாம்.

இவ்வாறு அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.